# இயல் 1 அன்னை மொழியே!

1. தமிழன்னையை பெருஞ்சித்திரனார் எவ்வாறு வாழ்த்துகிறார்? (அல்லது)

பெருஞ்சித்திரனாரின் மொழிவாழ்த்தை உம் பாடப்பகுதி கொண்டு எழுதுக. (அல்லது)

தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

- அன்னை மொழியே! அழகாய் அமைந்த செழுந்தமிழே!
- பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!
- பாண்டிய மன்னனின் மகளே!
- திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே!
- நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!
- பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.

2. தமிழ்மொழியின் செப்பரிய பெருமைகளைப் பெருஞ்சித்திரனார் எவ்வாறு கூறுகிறார்?

- செழுமைமிக்க தமிழே! எமக்குயிரே!
- சொல்லுதற்கரிய நின் பெருமைகளை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறு விரித்துரைக்கும்?
- பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே!

- வியக்கத்தக்க உன் நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.

- எம் தனித்தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

3. பெருஞ்சித்திரனார் - ஆசிரியர் குறிப்பு வரைக.

ஆசிரியர் : பெருஞ்சித்திரனார்

இயற்பெயர் : துரை மாணிக்கம்

பெற்றோர் : துரைசாமி, குஞ்சம்மாள்

காலம் : 10.03.1933-11.06.1995

பிறந்த ஊர் : சேலம் மாவட்டம்.

இயற்றிய நூல்கள் : கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம், உலகியல் நூறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி.

எழுதிய உரைநூல் : திருக்குறள் மெய்ப்பொருளுரை

நடத்திய இதழ்கள் : தென்மொழி, தமிழ்ச் சிட்டு

சிறப்பு : பாரதிதாசனின் தலைமாணாக்கர். இவரதுநூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

பாடப்பகுதி : கனிச்சாறு